## யூன்– 06 – புதன்

### புனித நோபர்ட்

**“அவர் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக, வாழ்வோரின் கடவுள்” மாற்12:27**

### முதல் வாசகம் : 2 திமோத்தேயு 1 : 1 – 3, 6 - 12

என் அன்பார்ந்த பிள்ளை திமொத்தேயுவுக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து இயேசு அருளும் வாழ்வுபற்றிய வாக்குறுதிக்கு ஏற்ப அவருடைய திருத்தூதனான பவுல் எழுதுவது: தந்தையாம் கடவுளிடமிருந்தும் நம் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவிடமிருந்தும் அருளும், இரக்கமும், அமைதியும் உரித்தாகுக!என் முன்னோரைப்போன்று தூய்மையான மனச்சான்றுடன் கடவுளுக்குப் பணியாற்றும் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் என்மன்றாட்டுகளில் உன்னை நினைவுகூருகின்றேன்.உன்மீது என்கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்தியபோது உனக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன். கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல, வல்லமையும் அன்பும் கட்டுபாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார். எனவே நம் ஆண்டவருக்கு நீசான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான்கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவை இல்லை. கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள்.அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல, காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி, கிறிஸ்து இயேசு வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார். நமக்குத் தூய அழைப்பு விடுத்துள்ளார். நம்மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன் மூலம் இப்போது அருள் வெளிப்பட்டுள்ளது. அவர் சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச்செய்தார்.அந்த நற்செய்தியை அறிவிப்பவனாகவும், திருத்தூதனாகவும், போதகனாகவும் நான் ஏற்படுத்தப்பட்டுள்ளேன். இதன் பொருட்டே நான் இவ்வாறு துன்புற்று வருகிறேன் எனினும் வெட்கமுறுவதில்லை. ஏனெனில், நான் யாரிடம் நம்பிக்கை கொண்டுள்ளேன் என அறிவேன். அவர் என்னிடம் ஒப்படைத்ததை இறுதிநாள்வரை காத்திட வல்லவர் என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மை நோக்கி என் கண்களை உயர்த்துகிறேன்.

### நற்செய்தி : மாற்கு12 : 18 - 27

அக்காலத்தில் உயிர்த்தெழுதல் இல்லை என்னும் கருத்துடைய சதுசேயர் இயேசுவை அணுகி, ”போதகரே, ஒருவர் மகப் பேறின்றித் தம்மனைவியை விட்டுவிட்டு இறந்துபோனால், அவரைக் கொழுந்தனே மனைவியாக ஏற்றுக்கொண்டு சகோதரருக்கு வழிமரபு உருவாக்கவேண்டும் என்று மோசே நமக்கு எழுதி வைத்துள்ளார். சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் ஒரு பெண்ணை மணந்து மகப்பேறின்றி இறந்தார். இரண்டாமவர் அவரை மணந்து அவரும் மகப்பேறின்றி இறந்ததார். மூன்றாமவருக்கும் அவ்வாறே நிகழ்ந்தது. ஏழுபேருக்கும் மகப்பேறு இல்லாமற்போயிற்று. அனைவருக்கும் கடைசியாக அப்பெண்ணும் இறந்தார். அவர்கள் உயிர்த்தெழும்போது, அவர் அவர்களுள் யாருக்கு மனைவியாக இருப்பார்? ஏனெனில் எழுவரும் அவரை மனைவியாகக் கொண்டிருந்தனரே!” என்றுகேட்டனர். அதற்கு இயேசு அவர்களிடம், ”உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால்தான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். இறந்து உயிர்த்தெழும்போது யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை. மாறாக அவர்கள் விண்ணகத் தூதரைப்போல் இருப்பார்கள். இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதைப் பற்றி மோசேயின் நூலில் முட்புதர் பற்றிய நிகழ்ச்சியில் இவ்வாறு வாசித்ததில்லையா? ”ஆபிரகாமின் கடவுள் ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள் நானே” என்று கடவுள் அவரிடம் சொன்னாரே! அவர் இறந்தோரின் கடவுள் அல்ல. மாறாக, வாழ்வோரின் கடவுள். நீங்கள் தவறான கருத்துக் கொண்டிருக்கிறீர்கள்” என்று கூறினார்.

**தியானம்:** நாம் துதித்து ஆராதித்து மகிழ்கின்ற கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல மாறாக அவர் வாழ்வோரின் வாழ்விக்கும் கடவுள். மத்.1:22-23 இல் நாம் வாசிக்கின்றோம், “இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்” என்று. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு வாழ்கின்றார், நம் சுக துக்கங்களில் கலந்து கொள்கின்றார், அவரது பிரசன்னம் நம்மோடு இருக்கின்றது என்பது பொருள் என்று விவிலியம் நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது. இயேசு நம்மோடு என்றும் உயிரோடு வாழ்கின்ற தெய்வம். திருத்தூதர் யோவானுக்கு அருளப்பட்ட காட்சியிலே சொல்லப்பட்ட செய்தி, “அஞ்சாதே! முதலும் முடிவும் நானே. வாழ்பவரும் நானே. இறந்தேன், ஆயினும் இதோ என்றென்றும் வாழ்கின்றேன்” (திவெளி.1:17-18). இயேசு மார்த்தாவைப் பார்த்துச் சொன்னார் “உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவா.11:25). மேலும் வானதூதர் மகதலா மரியாவைப் பார்த்துக் கேட்பார், உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பவரை கல்லறையில் ஏன் தேடுகின்றீர்கள்? என்று. (லூக்.24:5). உயிரோடு நம்மோடு வாசம் செய்து கொண்டிருக்கும் இயேசுவை நாம் எங்கே தேடிக் கொண்டிருக்கின்றோம்? நம்மோடு உடன்வாழும் இயேசுவை நம்மால் காணமுடியவில்லை என்றால் அவரது மகத்துவத்தை புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் இன்றைய நற்செய்தியில் நாம் காணுகின்ற சதுசேயரை இயேசு சாடுகின்றதைப்போல நம்மையும் பார்த்துச் சொல்லுவார், “உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால்தான் தவறான கருத்துக்களை கொண்டிருக்கிறீர்கள்” என்று. திருவிவிலியத்தை வாசித்து தெரிந்தவர்களைப் போன்ற சதுசேயர்களாக இல்லாமல் விவிலியத்தின் ஆழ்ந்த சத்தியங்களை தியானித்து அதற்கான விளக்கங்களை ஆவியானவர் நமக்குக் கற்றுத்தர வேண்டுமென்று அவருடைய பிரசன்னத்தில் அமர்ந்து ஜெபிக்கும் ஜெப வீரர்களாக நாம் மாறுவோம். அவ்வாறு இறைவனின் பிரசன்னத்தில் நாம் காத்திருக்கும் போது விண்ணகத்தின் மறைபொருள்கள் நமக்கும் விளக்கப்படும். எனவே விண்ணகத்தின் மறைபொருள்களை அறிய இயேசுவின் சீடர்களைப் போன்று நாம் இயேசுவிடம் வர வேண்டும், அவரிடம் நாம் கேட்க வேண்டும். அவரே மறைவாயிருக்கின்ற அனைத்தையும் நமக்கு விளக்கிச் சொல்லுவார். உண்மையை அறிந்தவர்களாக, விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ வாழ்வுதரும் வார்த்தையை வாசித்து, தியானித்து அனுபவிப்போம்.